[திரு. சா. கணேசன்] [19th October 1964

காரணம் குறிப்பிடவில்லை, அல்லது டெஃபனெட் அல்லது ரீசண்டு இல்லை என்ற காரணம் காட்டி தள்ளி விடாமல் பெரிய மனசு பண்ணி, அவசர நிலையையும் அவந்தர நிலையையும் ஏற்றுக்கொண்டு அதைத் தீர்க்க, அதற்கு விமோசனம் கிடைக்கத் தக்க வழி வகை செய்யவேண்டும் என்பதை நாமெல்லோரும் கூடி விவாதிக்கவும், அதற்கு என்னென்ன வகையிலே விமோசனம் கிடைக்க வழி ஏற்படுத்தலாம் என்று ஆராய்வதும் நமது கடமை என்ற காரணத்தினால் இந்தச் சபையின் வேறு அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று உங்கள் சம்மதத்தோடு கொண்டு வந்திருக்கிற ஒத்திவைப்புப் பிரேரணையைப் பிரேரேபிக்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்லம் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் இந்த விஷயத்தில் இவ்வளவு அக்கறை எடுத்துக் கொள்வதுபற்றி மிகுந்த மகிழ்ச்சி. அவர்கள் கூறினார்கள் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டதற்குக் காரணம் தெரியாது என்று. அது எனக்கும் தெரியாது. அது மட்டுமல்ல, தோல் பதனிடும் தொழிற்சாலைகள் மூடப்பட்டது என்றும் தெரியாது. ஒரு விவரமும் இல்லை. இந்த நிலையில் ஒரு விவரமும் இல்லாத போது விவாதிப்பதில் பிரயோசனம் இல்லை. கனம் அங்கத்தினர் ஒரு அவசரக் கேள்வி கேட்டால் 24-ம் தேதிக்குள் விடை அளிக்கலாம், அரசாங்கம் விவரங்களைப் பெற்று வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளலாம். இதைத்தான் தங்கள் முன் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகையால் அவசரப் பிரேரணையாக விவாதிக்க இப்போது இடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

MR. SPEAKER : The hon. Members Sri M. Karunanidhi, Sri Saw Ganesan, Sri K. R. Nallasivam and Sri M. Kalyanasundaram have given notice of an adjournment motion for discussing a matter of urgent public importance, viz., the shooting of one, Sri Arjunan, at Coimbatore on 17th October 1964.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சமீபத்திலே நாட்டிலே ஏற்பட்டிருக்கிற உணவு நெருக்கடி குறித்து இங்கு கொண்டுவரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணைகளையெல்லாம் சபை முதல்வர் அவர்கள் அவருக்கே உரிய திறமையான கணைகளின் மூலம் சமாளித்திருக்கிறார்கள் என்றாலும், இந்த ஒத்தி வைப்புப் பிரேரணையை முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்வார்கள் என்ற ஆழ்ந்த நம்பிக்கையோடு இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைத் தந்திருக்கிறேன். சென்னை போன்ற இடங்களிலும், வேறு பல இடங்களிலும் அரிசிக்கு மக்கள் படுகிற கஷ்டங்களை எண்ணி ஒத்தி வைப்புப் பிரேரணைகளில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் தொடர்பாக கோவை நகரில் அரிசி கிடைக்காமல் அல்லலுற்ற மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கினார்கள் என்று காரணம் காட்டப்பட்டு ஆறு பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்த ஆறு பேர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நண்பர் அர்ச்சுனன் கலெக்டரிடம் சென்று வாதாடினார்கள். கலெக்டர் அவர்களும் அர்ச்சுனன் வாதாடிய பிறகு அர்ச்சுனனோடு சென்று அங்கே விசாரித்து கலெக்டர் கேட்டுக்

19th October 1964] [திரு. மு. கருணாநிதி]

கொண்டதற்கிணங்க அந்த ஆறு பேர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். விடுதலை செய்யப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு சுமார் 2,000 பேர்களோடு எம்.எல்.ஸி. திரு. பொன்னுசாமி அவர்களுடைய வீட்டுக்கு அரிசி சுலபமாகக் கிடைக்க வழி வகை காண வேண்டுமென்று சென்றிருக்கிறார். அன்னார் அந்த நேரத்தில் அங்கே இல்லாத காரணத்தினால், நகர சபைத் தலைவர் திரு. நஞ்சப்பா அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறார். அவரும் வீட்டில் இல்லாத காரணத்தினால் ஊர்வலமாகக் கடைத் தெரு வழியாக வரும்போது ஒரு பையனைப் போலீஸ் அதிகாரி நையப் புடைக்கவும், அதைத் தடுத்து 'ஏன் அடிக்க வேண்டும்' என்று திரு. அர்ச்சுனன் கேட்க வாய்த் தகராறு முற்றி, போலீஸ் அதிகாரி பக்கத்தில் இருந்த போலீஸ்காரருடைய துப்பாக்கியை எடுத்துக் கொண்டு சுட்டு விடுவேன் என்று பயமுறுத்த, 'சுட்டுக் கொல்லுங்கள் பார்க்கலாம்' என்று அவர் மார்பைத் திறந்து காட்ட, உடனே அவர் தொண்டைக் குழியண்டை துப்பாக்கி கொண்டு சூடு கொடுத்திருக்கிறார். இப்படிப்பட்ட கொடூரமான காட்டாட்சி தர்பார் நடத்தியிருக்கிறார்கள். திரு. அர்ச்சுனனைச் சுட்டுக்கொன்ற போலீஸ் அதிகாரிக்கும் அவருக்கும் பழைய விரோதம் உண்டு என்று சொல்லப்படுகிறது. திரு. அர்ச்சுனனுக்காக வாதாடும் நேரத்தில், அவர் மது விலக்குக் கொள்கையை எதிர்த்து, சர்க்கார் திட்டத்தை எதிர்த்துப் போராடினார் என்று எல்லோருக்கும் தெரியும். அவருடைய இந்தப் போராட்டத்திற்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உடன்பாடுதானா என்ற . .

MR. SPEAKER :This is a matter which may go to a court. Therefore, the hon. Member need not go into the details. Let him be brief.

திரு. மு. கருணாநிதி : ஆகவே போலீஸ் அதிகாரி அர்ச்சுனன் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய எந்த விதமான வேறு பயங்கரமான நிலைமையும் ஏற்பட்டு விடவில்லை என்று மிகத் துல்லியமாகத் தெரிகிறது. வேண்டுமென்றே, அர்ச்சுனனைக் கொல்ல வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தக் காரியம் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சர்க்கார் இப்படிப்பட்ட போலீஸ் அதிகாரிகளை வளர்ப்பார்களேயானால் அல்லது இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு சர்க்கார் முயலுவார்களேயானால் அதனால் பெரிய பயங்கரங்கள் ஏற்படுவதுடன் கொள்கை மாறுபடுகிற தலைவர்களின் உயிருக்கு பாதுகாப்பு இல்லாமல் போய்விடும் என்பதினால் இதை ஒரு முக்கிய அவசரப் பிரேரணையாக எடுத்துக் கொண்டு, உடனடியாக ஒரு பொது நீதி விசாரணையை ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நீதி விசாரணை நடக்கிற வரையிலும் அந்தப் போலீஸ் அதிகாரியை வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், அனுமதிக்க வேண்டுமென்றும் சபையின் முதல்வர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், மனிதாபிமானத்தின் காரணமாக.

9-30 a.m.